Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களில் போய்த் தங்கினாலும், சங்.139:9 செப்டம்பர் 2018 No.9

தேவ வசனம் ஆவிக்குரிய வாழ்வைக் கொண்டு வருகிறது

The word of God brings spritual life

Ruth Paxson

ஆவிக்குரிய மனுஷனுக்கு அனுதினமும் நிரப்பப்படுதல் தேவை. அவன் தேவனையே சார்ந்து வாழ வேண்டிய வன் என்பதை ஒருபோதும் உணராமலிருக்க முடியாது. தேவனுடைய வசனத்தின் சத்தியத்தால் இரட்சிக்கப் பட்ட ஒருவன் அதனால் சுத்திகரிக்கப் பட்டுமிருக்கிறான். ஆவிக்குரிய மனிதனின் வளர்ச்சி, பலம் ஆகியவை தேவனுடைய வசனத்தில் உத்தமமாக அவன் தொடர்ந்து வாழும் அளவிற்கு ஏற்றாற்போல் காணப்படுகிறது. ஆக ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்பட தேவனால் நியமிக்கப்பட்டமுறை வேத வசனத்தைப் படிப்பது என்பது உண்மை.

யோவான் 17:17-ன்படி, "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" ".....என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" யோவா.8:31 என்று இயேசு கூறினார்.

தேவ வசனம் ஒரு கண்ணாடி

(யாக்கோபு 1:23-25 வசனங்கள் படிக்க)

ஒரு கண்ணாடி அதிலே பார்க்கிறவர்களின் தனிப்பட்ட தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. வேதபுத்தகம் ஒரு மனிதனை அப்படியே வெளிப்படுத்துகிறது. தேவனுடைய பார்வையில் இருப்பது போலவே மனித இருதயம் வேதபுத்தகத்தின் மூலம் காண்பிக்கப் படுகிறது. மனிதனின் இயற்கையானதும், மாம்சீகமானதும், மற்றும் ஆவிக்குரியதுமான காட்சி வேதவசனத்தில் முழுமையாகக் காண்பிக்கப்படுகிறது. வேதபுத்தகத்தை ஒருவர் கவனமாகப் படிக்கும் போது பலநூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களில் தன் வாழ்கை பிரதிபலிப்பதைக் காணலாம். ஆகானின் பேராசை, தாவீதின் பின்மாற்றம், எலியாவின் மனச்சோர்பு, யாக்கோபின் பெரும் பொருளாசை, அனனியா சப்பீராவின் பொய், பேதுருவின் மறுதலித்தல், தர்சு பட்டணத்து சவுலின் சுயநீதி பொறாமை ஆகியவை, அவிசுவாசமும் சுயநாட்டமுமுள்ள சீடர்கள் போன்றவர்களைப் பார்த்து தன் சொந்த பாவ இருதயத்தையும், வழி விலகிய வாழ்வையும் மனிதன் கண்டு கொள்ளக்கூடும். வேதபுத்தகம் உள்ளான ஆவியின் போர்வைகளை அகற்றி அதில் காணப்படும் இரகசிய எண்ணங்களையும் நோக்கங்களையும் வெளிப் படுத்துகிறது. அது நமக்கு நாம் எப்படியிருக்கிறோமென்பதைக் காட்டுகிறது.

இதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. ஒரு பரிபூரணமான மனிதனை மனிதனுடைய கண்களுக்கு முன்பாகத் திறந்து காண்பிக்கிறது. ஒரு கண்ணாடியில் கர்த்தருடைய மகிமையைக் காண்பது போல மனிதன் தன்னைப் பார்க்க முடிகிறது. ஏனெனில் வேத வசனம், "இயேசுக் கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளி" என்று 2 கொரி.4:6-ல் வாசிக்கிறோம். தான் இருக்கிறபடியே தன்னைக் கண்டுகொண்ட ஒருவருக்குத் தான் கண்ட காட்சியின்படி எப்படி வாழப் போகிறார், வேதவசனத்தின்படி செய்து கிறிஸ்துவின் சாயலைப் பெற்றுக் கொள்வது எப்படி என்ற சவாலை வேதபுத்தகம் அளிக்கிறது

வேத வசனம் சுத்திகரிக்கவும், புத்துணர்ச்சி அளிக்கவும் தண்ணீராகயிருக்கிறது

"..... அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்கு கிறதற்கும்....." எபே.5:25-26.

"நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப் பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" யோவா.15:3.

"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின் படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே" சங்.119:9.

பாவத்தில் தள்ளாடும் உலகத்தில் பரதேசிகளாக யாத்திரை செய்யும் நாம் அதின் அசுத்தங்களோடு தொடர்ந்து தொடர்புடையவர்களாயிருப்பதால் எப்போதும் சுத்திகரிக்கப்படுவது அவசியம். முற்காலங்களில் வெண்கல பலிபீடத்தில் இரத்தத்தால் சுத்திகரிக்கப் பட்ட ஆசாரியர்கள், ஆராதனைக்கும் கூடாரத்தின் பணிகளுக்கும் செல்லுமுன் தண்ணீரினால் மறுபடியும் தங்களைக் கழுகி தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டார்கள். ஜீவ வசனத்தின் இரத்தத்தால் பாவத்தின் உணர்விலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நாம், அனுதினமும் எழுதப்பட்ட வசனமாகிய தண்ணீரால் கழுகப்பட வேண்டியது அவசியம். கிறிஸ்தவ வாழ்வு சுத்தமாகவும் பரிசுத்தமாகவுமிருக்க வேதவசனம் இருதயத்தில் மறைத்து வைக்கப்பட்டு வாழ்வில் பயன்படுத்தப்பட வேண்டும்.

தண்ணீர் புத்துணர்வையும் அளிக்கிறது. அனேக விசுவாசிகள் வேத வசனத்தை அமைதியாக சிந்தித்ததின் மூலமாக ஆவியின் களைப்பு நீங்கிய தாகவும், ஆத்துமாவின் அதைரியம் அகற்றப்பட்டதாகவும், சரீர களைப்பு கூட நீங்கியதாகவும் சாட்சி கூறியுள்ளனர்.

வேதவசனம் நம்மை போஷிக்கும் உணவாகவும் நமக்கு மகிழ்ச்சி தருவதாகவுமிருக்கிறது

வேதவசனம் புதிதாகப் பிறந்த குழந்தைக்குப் பால் போன்றது. ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்தோருக்கு அது பலமான ஆகாரமாகவும் ஆவிக்குரிய சிந்தையுடையவர்களுக்கு தெளிதேனாகவுமிருக்கிறது. "நீங்கள் வளரும் படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" 1பேதுரு 2:3. "பலமான ஆகாரமானது நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடைய வர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" எபி.5:14. "அவை பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப் படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது" சங்.19:10.

தேவ வசனத்தை உட்கொள்ளுகிறவர்கள் பெலனடைவர். ஆனால் அதை உதாசீனம் பண்ணுகிறவர்கள் குறுகிவிடுவர். நாம் உட்கொள்ளும் ஆவிக்குரிய உணவுக்கேற்றபடி நமது வளர்ச்சியுமிருக்கும்.

சரியான அளவு உணவு உண்ணாதவர்கள் ஆவிக்குரிய நோய்களுக்கு ஆளாவார்கள். அவர்கள் சோதனைகளை எதிர்க்க வல்லமையற்றவர்களாகவும், தவறுகளைக் கண்டுபிடிக்க குருடராகவும், பாவத்தை மேற்கொள்ள உதவியற்றவர்களாகவுமிருப்பர். தீயோனுடைய அனைத்து ஏமாற்று வழிகளுக்கும், தந்திரமான வலைகளுக்கும் ஆளாகிவிடுவார்கள். வாழ்க்கையில் முன்னேற்றமில் லாமலிருப்பதோடு உலகத்திற்கு முன் பாக கனவீனமடை வார்கள்.

தேவ வசனத்தை எப்போதும் புதிதாக கற்றுக் கொள்ளாதவர்கள் தேவ கிருபை, அன்பு, வல்லமை ஆகியவற்றின் புதிய பொக்கிஷங்களை அடைய முடியாது. அவர்கள் பழைய அனுபவங்கள், சாட்சிகள் ஆகிய கெட்டுப்போன மன்னாவை உண்கிறார்கள்.

வேதத்தை நிராகரிப்பதன் மூலமாக ஊழியர்கள் சிலவேளைகளில் தங்கள் வல்லமையை இழந்துவிடுகிறார்கள். அவர்கள் சொல்லும் செய்தி புத்துணர்ச்சியற்றதும், கனியற்றதுமாகி விடுகிறது. அப்படிப்பட்டவர்கள் தன் சொந்த ஞானத்தையும், திறமைகளையும்,

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com
வங்கி கணக்கு : VARUKAYIN THOOTHAN, A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

இம்மாத பொன்னான சிந்தனை

ஜெபத்தையே தங்கள் முக்கிய வேலையாக்கின பரிசுத்தவான்களின் கைகளிலேயே கர்த்தர் பரலோகத்தின் திறவுகோல்களைக் கொடுத்திருக்கிறார். அவர்களைக் கொண்டு கர்த்தர் ஆவிக்குரிய அற்புதங்களைச் செய்கிறார்.

வாக்குத்தத்தம்

ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. *ஏசாயா 49:15*

Can a woman forget her sucking child, that she should not have compassion on the son of her womb? Yea, they may forget, Yet will I not forget thee.

வாசகருக்கு என் அன்பு கிழிதம்

கிறீஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

செப்டம்பர் மாத வருகையின் தூதன் பத்திரிக்கைக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். ஆகஸ்ட் மாதத்தின் ஆரம்ப நாட்களில் இக்கடிதத்தை எழுதுவதால் எனது தகப்பனாரை நினைவு கூருகிறேன்.

எனது தகப்பனார் பாஸ்டர் **S. தேவதாசன்** அவர்கள் 1905-ம் ஆண்டு ஆகஸ்ட் 13-ம் தியதி பிறந்து, 2005-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் தியதி நித்தியத்திற்குள் பிரவேசித்தார்கள். சில சிறந்த தேவ ஊழியர்கள் தங்களது 99-வது வயதில் இந்த உலக ஓட்டத்தை முடித்தபோதிலும், எனது தகப்பனார் பாஸ்டர் **S. தேவதாசன்** அவர்களுக்கு ஆண்டவர் கிருபையாய் 100 வயது 3 மாதங்களைக் (13.08.1905 - 13.11.2005) கொடுத்தார், தேவாதி தேவனுக்கே மகிமை செலுத்துகிறேன்.

1969-ம் ஆண்டு தூதன் அச்சிடுவதற்கென்று ஒரு அச்சகத்தை அவர்கள் ஆரம்பித்து அடிமையிடம் கொடுத்தார்கள். ஏறக்குறைய **50 ஆண்டுகள்** தூதனை அச்சிட்டு அனுப்பும் சிலாக்கியத்தை அடியேன் பெற்றுள்ளேன், ஆண்டவருக்கே மகிமை.

அது போல வயதின் காரணமாக, 1999-ம் ஆண்டு **வருகையின் தூதன்** ஊழிய பொறுப்பை, கர்த்தருடைய சித்தப்படியே என்னிடம் ஒப்படைத்தார்கள். **சுமார் 20 ஆண்டுகள்** வருகையின் தூதன் ஆசிரியராக அடியேன் ஊழியம் செய்ய தேவன் இரக்கம் பாராட்டினார், எல்லா துதியும், கனமும், மகிமையும் கர்த்தர் ஒருவருக்கே.

கடந்த ஆண்டு 2017 டிசம்பர் 30-ம் தியதி வரை நமக்கு தபால் சலுகை இருந்தது, எனவே பத்திரிகைக்கு **வருட சந்தா, தனிப்பிரதி விலை** என்று அச்சிடப்பட வேண்டியது தபால் துறையினரின் ஆணையாயிருந்தது. ஆனால் இந்த ஆண்டு 2018 முதல் நமக்கு தபால் சலுகை இல்லை. எனவே மார்ச் மாத பத்திரிகையில், ஆசிரியர் கடிதம் 7-ம் பக்கம் இவ்விதமாக எழுதியுள்ளேன்:

தபால் சலுகை இல்லாதபடியால் வருகையின் தூதன் பத்திரிகைக்கு சந்தா கிடையாது.

1955-ம் ஆண்டு வருகையின் தூதன் பத்திரிகை வெளியிடப்பட்டபோது, இந்த பத்திரிகைக்குச் சந்தா கிடையாது. ஆனால் சந்தா இல்லாத பத்திரிகைக்கு **தபால் சலுகை** கிடையாது என்று தபால் துறை சொன்ன ஒரே காரணத்திற்காக **சந்தா ரூ 1.00** என்றுஅச்சிட்டார்கள்.

சுமார் 70,000 பத்திரிகைகள் அச்சிடப்பட்டு, உலகமெங்கிலும் அனுப்பப்படும் ஆங்கில வருகையின் தூதன் (Herald of His Coming) பத்திரிகையின் ஆசிரியர், ஜூலை மாதம் எனக்கு அனுப்பிய செய்தி கடிதத்தில் (News letter) இவ்விதமாக எழுதியுள்ளார்:

Praise the LORD with us for His provision of funds month after month for the printing and shipping of copies of Herald of His Coming and other Herald materials!

(ஆங்கில தூதன் அச்சிட்டு அனுப்புவதற்கான தேவையை தேவன் மாதா மாதம் சந்திப்பதற்காக எங்களோடே சேர்ந்து ஆண்டவரை துதியுங்கள்)

ஆம், அருமையான தேவனுடைய பிள்ளைகளே, தமிழ் வருகையின் தூதன் ஊழியத்தின் தேவைகளையும் தேவன் மாதா மாதம் கிருபையாய் சந்திக்கும்படி நீங்கள் ஜெபிப் பீர்களா?

1. ஆசிரியர் : உங்கள் சகோதரன் குடும்பம்
2. உதவி : மகன் சாமுவேல் ஃபின்னி குடும்பம்
3. மாதந்தோறும் பத்திரிகைக்கான காகிதம், அச்சடிப்பதற்கான செலவு, அனுப்புவதற்கான (despatching) செலவு.
4. தபால் கட்டணம், மாதம் முழுவதும் தபால் தலை மற்றும் கொரியர் செலவுகள்.
5. தண்ணீர், மின் கட்டணங்கள், தொலைதொடர்பு, நெட் செலவுகள், பெட்ரோல் மற்றும் வாகன செலவுகள்.

இவற்றிற்காக மாதம் ரூபாய் 75,000 தேவை

6. தேவனுடைய தெளிவான ஆலோசனைப்படி நாம் மாதந்தோறும் நடத்தும் உபவாச ஜெபங்களுக்கு ஜெப அட்டைகள், பதிவுதாள், போக்குவரத்துச் செலவு, தங்கும் வசதி, கொரியர் பார்சல் செலவுகள், பிற செலவினங்கள் இவற்றிற்காக மாதந்தோறும் ரூபாய் 25,000 தேவை. (உபவாச ஜெபங்களுக்கு தனி வங்கி கணக்கு உள்ளது)
7. வருகையின் தூதன் **ஊழியத்தின் முன்னேற்றத்திற்காக** நாம் எடுக்கும் சில முயற்சிகள் : 1. கட்டடங்கள் 2. கம்யூட்டர்கள் 3. நவீன அச்சு இயந்திரங்கள்.

வருகையின் தூதன் ஊழியம் நடைபெறும் கட்டடங்களின் தற்போதைய நிலைமையை திரும்பவும் வாசகருக்கு எழுதுகிறேன்:

1994-ம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட **தேவ மகிமை** என்ற அலுவலக கட்டடம், அதற்கு பிற்பாடு ஒரு தடவை கூட வர்ணம் (painting) பூசப்படவில்லை.

1999-ம் ஆண்டு ஆரம்பித்த **தேவனுடைய வீடு** வெளிப்புறம் பூசாமலும், உட்புறம் அநேக வேலைகள் செய்யப்படாமலும், கதவு, ஜன்னல், சுவர் வர்ணம் (painting) பூசப்படாமலும் பரிதாபமாக காட்சி அளிக்கிறது. கார் பார்க்கிங் வேலை முடிக்கப்படவில்லை.

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் **வானத்தின் பலகணிகளைத்** திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" மல்கியா 3:10.

"அவனவன் **விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல,** தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" 2 கொரிந்தியர் 9:7.

(7-ம் பக்கம் பார்க்க)

உபவாச ஜெபம்	**முன்னேற்றப்பணி**
WESLEY DEVADASON A/c. No.: 370601000002557 I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : IOBA0000063	WESLEY DEVADASON A/c. No.: 61822200136904 Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1 IFSC Code : SYNB0006182

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியையும் பயன்படுத்துவார்கள். இவர்களை ஆசீர்வதிப்பதாக தேவன் வாக்களிக்கவில்லை. "உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படி" *1 கொரி.2:4* என்று வாசிக்கிறோம்.

வேதவசனம் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது

"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" *சங்.119:105.*

கிறிஸ்தவனைச் சுற்றிலும் மறைக்கப்பட்ட குழிகள் உண்டு; சாத்தான் சிக்க வைக்கும் கண்ணிகளை நன்றாக அமைத்து வைத்திருக்கிறான். "பிசாசினுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கலாகத்தக்கதாகவும்....." *2 தீமோ.2:26.* "துன்மார்க்கர் எனக்குக் கண்ணி வைக்கிறார்கள். ஆனாலும் நான் உம்முடைய கட்டளைகளை விட்டு வழி தவறேன்" *சங்.119:110.*

நேரானதும், இடுக்கமானதுமான வழி எளிதில் கண்டுபிடிக்கக் கூடாத தாகவும், கண்டுபிடித்தாலும் அதிலும் ஒரு சிலரே தொடருவதாகவுமிருக்கிறது. இந்தக் கடைசி ஆபத்தான காலத்தில் சபைக்குள் லௌகீகம் அதிகமாக நுழைந்துவிட்டது. மந்தையின் மேய்ப்பனும் வேதவசனத்திற்கு எதிராக நடக்கிறார்கள். உத்தம கிறிஸ்தவர்களும் பிரமித்து நிற்கிறார்கள். ஏனெனில் இடுக்கமான பாதையில் தொடர்ந்து எப்படி நடப்பது என்பதை அவர்கள் அறியார்கள். எனவே அவர்களுக்குப் பாதையில் ஒரு வெளிச்சம் நிச்சயம் தேவை.

இதற்கு மேலாக ஒவ்வொரு அடியும் காண்பிக்கப்பட வேண்டும். தேவவசனம் ஒரு வழிகாட்டியாயிருக்கிறது. அது இருதயத்தில் மறைத்து வைக்கப்பட்டு வாழ்வில் கவனமாக பின்பற்றப்பட்டால் பாதை தவறி அலையவும், இடறவும் நேரிடாது. அதனால் ஒவ்வொரு அடியும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக ஒழுங்குபடுத்தப்பட்டு முழுமையான கீழ்ப்படிதலோடு பின்பற்றப்படும்.

"உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்" *சங்.119:133.*

"அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை" *சங்.37:31.*

போதிக்கவும், கற்பிக்கவும், எச்சரிக்கவும், திருத்தவும், வழிநடத்தவும் கிறிஸ்தவன் பூரணமடைந்து தன்னை தேவபணிக்கு ஆயத்தம் செய்யவும் வேண்டிய யாவும் வேதபுஸ்தகத்தில் உண்டு. *(2 தீமோ.3:16-17 வசனங்களைப் படிக்க)*

தேவ வசனம் நம்மை நியாயந்தீர்க்கக் கூடியது

"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" *எபி.4:12.*

'Kritikos' என்ற கிரேக்க பதம் 'நியாயந்தீர்க்கக் கூடியது' எனப் பொருள்படுகிறது. இன்றைய மக்களின் மனநிலை வேதவசனத்தை விமர்சிக்கும் தன்மையுடையதாகவும் ஆனால் வேத வசனம் தன்னை விமர்சிக்க விடாத தாகவுமிருக்கிறது. ஆனால் வேதவசனத்தின் ஒரு நன்மை பயக்கும் பணி கிறிஸ்தவனின் எண்ணங்களையும், செயல்களையும் நியாயந்தீர்ப்பதாகும். எனவேதான் சங்கீதக்காரன் தனது உத்தம ஜெபத்தில் "தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்" *சங்.139:23-24* எனக் குறிப்பிடுகிறார்.

"என் ஆத்துமா பிழைத்திருந்து உம்மைத் துதிக்கக்கடவது; உமது நியாயத்தீர்ப்புகள் எனக்கு உதவியாயிருப்பதாக" *சங்.119:175.*

தேவ வசனத்தின் நீதியுள்ள நியாயத்தீர்ப்பின் கீழ் ஒவ்வொரு தேவ பிள்ளையும் தன்னை வைத்துக் கொண்டால் ஆவிக்குரிய வாழ்வு உயிர்ப்பிக்கப் படுவது திண்ணம். வேதபுத்தகம் மனிதனுடைய எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் செயல்களை விமர்சிக்க அனுமதித்து அதின் எச்சரிப்புகளை ஏற்றுக்கொண்டால் நீண்ட நாட்களாக நாம் ஜெபித்து காத்திருக்கும் எழுப்புதல் நெருப்பாகப் பற்றி எரியும்.

தூய வாழ்வுக்கு தேவ வசனம்

"கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள், அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் அநியாயம் செய்வதில்லை; அவருடைய வழிகளில் நடக்கிறார்கள்" *சங்.119:1-3.*

தேவ பிள்ளைகள் தேவபயத்தோடு வாழத் தேவன் எதிர் பார்க்கும் ஒவ்வொரு படிகளுக்கும் தேவையான மூலாதாரங்கள் தேவனிடமுண்டு. இத்தகைய வாழ்வைக் கட்டுப்படுத்தும் கொள்கைகள் வேதவசனத்திலுண்டு. மேலும் அவற்றைப் பயிற்சி செய்யும் விதமும் அங்கு தரப்படுகின்றன. தேவ சமூகத்தை அனுதினமும் நாடி கிறிஸ்துவைப் போல வாழவிரும்புகிறவன் வேதவசனத்தால் நிறைந்து அதன்படி ஆர்வத்துடன் நடக்கிறான்.

வேதவசனம் பட்டயமாயிருக்கிறது

"..... தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" *எபே.6:17.*

ஆவியால் நிரப்பப்பட்ட தேவ பிள்ளைக்கு எதிரிகள் உண்டு. அவன் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறான். நரகத்தின் வல்லமைகள் அவனுக்கு எதிராயிருக்கின்றன. அவன் தாக்குதல்களுக்கு உள்ளாயிருக்கிறான். இடையிடையே தோல்விகளும் ஏற்படலாம். எனவே தாக்குவதற்கும், பாதுகாப்பதற்கும் உரிய ஆயுதங்கள் அவனுக்கு வேண்டும். அவன் சாத்தானுடைய எல்லாவித தாக்குதல்களுக்கும் எதிராக உறுதியாயிருக்கக் கூடியவனாயிருக்க வேண்டும்.

இதற்கு ஒரே வழி தேவ மனிதனாகிய இயேசு பயன்படுத்திய வழிதான். அவர் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்ட போது பயன்படுத்தியது ஆவியின் பட்டயம் - "எழுதியிருக்கிறதே" என்பதுதான். மூன்று தாக்குதல்களுக்கும் இதையே பயன்படுத்தி சாத்தானை மடங்கடித்தார்.

தேவ மனிதன் இப்பட்டயத்தை எப்போதும் ஆயத்தமாக வைத்திருந்தார். அவர் வேதவசனச் சுருளை எடுத்து அதிலிருந்து ஒரு பதிலைப் பெற தாமதிக்கவில்லை. அவரது உள்ளம் வேதவசனத்தால் பூரிதமாக்கப்பட்டிருந்தபடியால் சாத்தான் தாக்கியபோது ஆவியானவர் உடனே அவரது ஞாபகத்தில் சரியான வார்த்தைகளைக் கொண்டு வந்து சாத்தானை விரட்டியடிக்க உதவி செய்தார். சோதனைவேளையில் அவரது இருதயத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வேதவசனம் பயன்படுத்தப்பட்டது. "நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" *சங்.119:11.*

மிகுந்த தேவையுள்ள நேரங்களில் நம்மில் மறைத்து வைக்கப்பட்ட வேதபகுதி ஆவியின் பட்டயமாக பயன்படுகிறது. நாம் கற்றுக்கொண்டதும், வாழ்ந்து கொண்டிருப்பதுமான வேத வசனங்கள் சாத்தானோடு போரிடும் போது உறுதுணையாயிருக்கின்றன.

நாம் பயன்படுத்தும் இந்தப் போராயுதத்தின் மீது நமக்கு நம்பிக்கையிருந்தால் வெற்றி நிச்சயம்.

சங்.12:6-ல் "கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக் கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது" என படிக்கிறோம்.

"தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்" *நீதி.30:6.*

தேவ வசனமாகிய ஆயுதத்தைக் குறித்த சந்தேகத்தால் அனேகக் கிறிஸ்தவர்கள் பாவத்திற்கும் சாத்தானுக்கும் எதிரான போரில் தோல்வியடைகிறார்கள். அவர்களுக்கு வேதவசனம் ஆவியின் பட்டயமாக பயன்படுவதில்லை. மனிதன் தன் வாழ்க்கைப் பாதையில் உதவியாக பயன்படுத்தும் கோலாகவுமிருக்கிறது. அவன் அதை தன் சொந்த புத்தி அனுபவம் ஆகியவற்றிற்கேற்ப சுயாதீனமாக பயன்படுத்துகிறான், இது தவறு. வேத வசனம் முற்றிலும் நம்பப்படத் தக்கதாகவும் முடிவெடுக்கும் அதிகாரமாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் அதின் பயனைப் பெறமுடியும்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவ வசனம் எரிக்கவும் அனலாக்கவும் கூடியது

"..... ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல என் இருதயத்தில் இருந்தது. அதை சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற் போயிற்று" எரே.20:9.

வேதபுத்தகம் அக்கினியைப் போல களிம்புகளை எரித்து சுத்தப் படுத்துகிறது. அந்த அக்கினி ஜீவாலைக்கு முன்பாக தேவ சித்தத்திற்கு எதிரானதொன்றும் நிற்க முடியாது எரே.5:14; 1 பேது.1:22.

இதே வேளையில் இதே அக்கினி ஆறுதல், சந்தோஷம் ஆகியவற்றால் இருதயத்தை அனலூட்டி பாடுகளாலும் துக்கங்களாலும் சோர்ந்த உள்ளங்களைத் திடப்படுத்துகிறது.

"அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல்; உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது" சங். 119:50. "ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" 1 தெச.4:18.

வேதவசனம் நொறுக்கும் சம்மட்டி

"என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்" எரே.23:29.

மனித வாழ்வில் அதிகமான பிடிவாதம், எதிர்ப்பு, புரட்சி ஆகிய கசடு போன்ற தன்மைகள் காணப்படுகின்றன. தன் சொந்த வாழ்வின் வழியிலே செல்ல பழகினவர்களும் உலக இன்பங்களை நாடுகிறவர்களும், சொந்த சித்தத்தை நிறைவேற்ற முற்படுகிறவர்களும் தங்களைத் தாழ்த்தி அர்ப்பணம் செய்வது இயலாதது. நம்மில் எளிதில் நொறுக்க முடியாத கடினமான பகுதிகளுண்டு. அவை உடைத்து உருக்கப்பட வேண்டும்.

கிறிஸ்தவன் வேத வசனங்களைக் கற்று, தேவனுடைய அன்பு நிறைந்த இரக்கம், பரிவான இரக்கம், மாறாத உத்தமம், தணிக்கமுடியாத அன்பு, குன்றாத கிருபை ஆகியவற்றின் மிருதுவாக்கும் கதிர்களினடியில் வரும்போது, அவனது இருதயம் உருகி, சித்தம் உடைந்து, வாழ்வு மகிழ்ச்சியுடையதாகவும் தாழ்மையுடையதாகவும் மாறுவதால் அவன் தேவனுடைய அன்பான சித்தத்திற்கு அடிபணிகிறான்.

தேவ வசனம் விதையாயிருந்து முதிர்ச்சியடைந்து பெருகுகிறது

"..... விதை தேவனுடைய வசனம்" லூக்.8:11.

விதை என்ற சிறிய கடின உறையை உடைய பகுதியை ஒரு அலமாரியில் பூட்டி வைத்தால் அது விதையாகவே இருக்கும். ஆனால் அது தகுந்த மண்ணில் இடப்பட்டு உரம், தண்ணீர், வெளிச்சம் போன்றவை தரப்பட்டால் அது ஒரு செடியாகவோ, மரமாகவோ வளரும். ஆனால் கெட்டுப் போகாத விதையாகிய வசனம் நிலத்தில் (மனித இதயம்) விதைக்கப்பட்டால் தூய ஆவியின் அருளால் ஒரு புதிய சிருஷ்டி உருவாகிறது.

"ஆகையால் நீங்கள் எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" யாக்.1:21.

விதை உத்தம தியானத்தாலும் வாஞ்சையுள்ள ஆராய்ச்சியினாலும் பராமரிக்கப்பட வேண்டும். அது வளர சமயம் அளிக்க வேண்டும். வசனம் ஆராய்ந்து தியானிக்கப்பட வேண்டும். விதை மனதிலும், இருதயத்திலும், மனச்சாட்சியிலும் பதிக்கப்பட்டு முழுமையான பலனைத் தர வேண்டும். விதை விசுவாசம் என்ற மண்ணில் தங்கியிருக்க வேண்டும். வசனத்தில் கிறிஸ்தவன் நிலைத்திருக்க வேண்டும். இரவும் பகலும் அது அவனில் தங்கியிருக்க வேண்டும்.

"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்; நாள் முழுதும் அது என் தியானம்" சங்.119:91.

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந் தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்" யோவா.15:7.

இருதயத்தின் குளிர்ந்த நிலை, மனச்சாட்சியின் கடினம், சித்தத்தின் பலவீனம், சாட்சியில் மெலிவு, ஆராதனையில் மகிழ்ச்சியின்மை, சேவையின் பயனின்மை, ஜெபத்தில் வல்லமை குறைவு இவையாவும் தேவ வசனத்தை உதாசீனம் செய்து நிர்விசாரமாயிருப்பதால் ஏற்படும் விளைவுகளாகும். "..... என் உபதேசம் உங்களுக்குள்ளே இடம் பெறாதபடியால், என்னைக் கொலை செய்யத் தேடுகிறீர்கள்" யோவா.8:37. ஆனால் வேதவசனத்திற்கு அதற்குரிய இடம் அளிக்கப்பட்டால் அது பாவ உணர்வை ஏற்படுத்தி மனந்திரும்பச் செய்து, சுத்திகரித்து, கட்டுப்படுத்தி, திருத்தி, அர்ப்பணம் செய்ய நம்மை வழி நடத்தும். அது அச்சாக இருந்து வாழ்வு கிறிஸ்துவின் சாயலில் வளரச்செய்யும்.

வேதபுத்தகத்தின் அதிசயம்

The wonder of the Bible

Dyson Hague

நமது அனுபவம் விரிவாகும் போது வேதபுத்தகத்தினைக் குறித்த அதிசயம் வளர்ந்து கொண்டே செல்லுகிறது. நாம் அதிக ஆழமாக அதை ஆராயும்போது அது ஒரு புஸ்தகம் மட்டுமல்ல, ஆனால் அது தான் புத்தகம் என்று உணரமுடியும். அது தனித்தன்மை உடையது. அதன் மகிமையிலும், உயர்விலும் அதை எந்தப் புத்தகமும் தாண்ட முடியாது. பூமிக்கும் வானத்திற்குமுள்ள உயரத்திற்கும், தேவ குமாரனுக்கும் மனிதருக்குமிடையில் உள்ள வேறுபாடு வேதபுத்தகத்திற்கு உண்டு.

அது உருவாகிய அதிசயம்

வேதபுத்தகத்தின் வரலாறு, அதன் தோற்றம் ஆகியவற்றை படித்த யாவரும் அது உருவாகிய இரகசியத்தால் பிரமிப்படையக்கூடும். இது கடந்த காலங்களிலும் இந்த நாளிலும் உலகின் ஒரே புத்தகம் (The Book) எனக் கூறலாம். இது உண்மையாகவே இலக்கிய அதிசயம். இதை எழுத திட்டமிட்ட எந்த மனிதனுக்கும் கட்டளை கொடுக்கப்பட வில்லை. இதை எழுதிய எந்த மனிதருக்கும் எந்த ஒருமுகப்பட்ட திட்டமும் இருக்கவில்லை.

காலத்தின் இரகசியமாக வேத புத்தகம் படிப்படியாக வளர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாகவும், பகுதி பகுதியாகவும், நூற்றாண்டு நூற்றாண்டுகளாகவும், துண்டு துண்டாகவும், தொடர்பற்ற பகுதிகளாகவும், பற்பல மனிதர்களால், எந்த குறிப்பிட்ட நோக்க முமின்றி இணைந்த திட்டங்களுமின்றி எழுதப்பட்டது.

ஒருவர் ஒரு பகுதியை அரேபியாவிலிருந்தும், இன்னொருவர் இன்னொரு பகுதியை சிரியாவிலிருந்தும், மூன்றாவர் பலஸ்தீனாவிலிருந்தும் இன்னொருவர் கிரேக்க தேசம் மற்றும் இத்தாலி நாட்டிலிருந்தும் எழுதியுள்ளனர். சிலர் பிறர் எழுதுவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்போ அல்லது பின்போ எழுதியுள்ளனர். முதற் பகுதியை எழுதியவர் இறுதிபகுதியை எழுதியவர் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதியிருக்கிறார்.

பிற புத்தகங்கள் எப்படி உருவாயின என்பதை நாம் அறிவோம். ஒருவர் ஒரு நூலை எழுதத் தீர்மானித்து, சிந்தனை செய்து அதற்குரிய விஷயங்களை சேகரித்து அதை எழுதவோ அல்லது யாரோ ஒருவரை எழுதவைத்து அதை அச்சடித்து சில மாதங்கள் அல்லது வருடங்களுக்குள் முடிவுபெறுவது. சாதாரணமான ஒரு புத்தகம் முடிவுபெற ஒரு வருடம் முதல் 10 வருடங்கள் வரை ஆகலாம். ஆனால் கிப்பன் எழுதிய, "ரோமப் பேரரசின் வீழ்ச்சியும், விழுதலும்" டென்னிஸன் எழுதிய கவிதைகள் போன்றவை நீண்ட காலமாக எழுதப்பட்டன. பொது வாகச் சொன்னால் ஒரு புத்தகம் ஒரு மனிதனால் அவனது தலைமுறை காலத்திலே எழுதப்படுகிறது.

ஆனால் வேதபுத்தகம் எழுத 1500 ஆண்டுகளாகியிருக்கிறது. மேலும் இந்த உலக சரித்திரத்தில் 60 தலைமுறைகளைக் கடந்து வந்திருக்கிறது. தேவனை பற்றிய நமது கருத்துக்களை விரிவாக்கி, அவரது அளவில்லா பொறுமை, பொறுமையாகவும், அமைதியாகவும் கவனிக்கும் அவரது பண்பு, மக்களின் துரிதம், இளைப்பாறுதலின்மை எல்லாவற்றையும் குறித்த புதிய அபிப்பிராயங்களோடு மெதுவாக இப்புத்தகம் வளர்ந்தது. சரித்திரம், தீர்க்கதரிசனம், கவிதை, சுயசரிதை ஆகிய பகுதிகளுடன் இறுதியில் கர்த்தருடைய வீடும் (1 ராஜா 6:7) இணைந்து தேவை நிறைந்த

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகிற்கு முன்பாக முடிவு பெற்ற ஒன்றாக வைக்கப்படுகிறது.

மோசே இறந்தபோது 5 சிறு பகுதிகள் மட்டுமே இருந்தன. தாவீது சிங்காசனத்தில் அமர்ந்தபோது இன்னும் சில பகுதிகள் கூட்டப்பட்டன. தொடர்ந்து இளவரசர்கள், ஆசாரியர்கள், தீர்க்கர்கள் போன்றவர்களும் தங்கள் சிறிய பெரிய பங்களிப்புகளை அளித்து பழைய ஏற்பாடு முழுவதும் முடிவுற்றது.

பின்பு சர்வ வல்ல தூய ஆவியானவரின் செயலால் துண்டு துண்டாக சரிதையும், கடிதங்களுமாக புதிய ஏற்பாடும் முடிந்தது.

ஆம் இது அற்புதமான புத்தகம். எல்லாப் புத்தகங்களுக்கும் மேலானது. இரகசியங்களில் இதன் உருவாக்கம் ஒரு அதிசயம். தேவன் இதன் ஆக்கியோன்.

இதன் இணைப்பின் அதிசயம்

இதை ஒரே புத்தகமாகக் கருதுகிறோம். ஆனால் இது 66 புத்தகங்கள டங்கிய புத்தகசாலை. மேலும் இது முப்பது, நாற்பது வேறுபட்ட நபர்களால் மூன்று மொழிகளில் மிகவும் வித்தியாசமான தலைப்புகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இது எழுதப்பட்ட சூழ் நிலைகள் அசாதாரணமானவைகளும் வேறுபட்டவைகளுமாம்.

ஒருவர் சரித்திரத்தையும், இன்னொருவர் சுய சரிதையையும், ஒருவர் இறையியலையும், மற்றொருவர் கவிதையையும், இன்னுமொருவர் தீர்க்கதரிசனத்தையும் எழுதியுள்ளனர். சிலர் தத்துவத்தையும், சிலர் நீதி சாஸ்திரத்தையும், வம்ச அட்டவணையையும், நாடுகளின் வேறுபாடு மற்றும் சிலர் தீரச் செயல்களையும், பிரயாணங்களையும் எழுதியுள்ளனர்.

இவ்வாறு வேறுபட்ட கடினமான தலைப்புகளை உடையதாயிருந்தாலும் வெவ்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்டாலும் மனிதராலும் தேவனாலும் இணைக்கப்பட்டு ஒரே புத்தகமாக நமக்குக் காட்சியளிக்கிறது. இலக்கிய இணைப்பின் அதிசயமான ஒரே புத்தகம் இது.

இதன் காலத்தின் அதிசயம்

இப்புத்தகம் இன்று இங்கிருப்பது ஒரு அதிசயம். அதன் காலத்தை நாம் எண்ணிப் பார்க்கும்போது வேதபுத்தகத்தை நாம் வைத்திருப்பதே அதிசயம். வேத புத்தகத்தைப் பிற புத்தகங்களோடு ஒப்பிடும்போது இது ஒரு பெரிய அதிசயம்.

இலக்கியத்தின் மிகப்பெரிய சோதனைகளில் ஒன்று காலம். சில ஆண்டுகளுக்கு முன் பேர்பெற்றிருந்த புத்தகங்கள் இன்று மறக்கப்பட்டு விட்டன. அவை பிறந்து, பேர்பெற்று மரித்துவிட்டன. அவைகளின் வலிமை போய்விட்டது. ஆனால் வேதபுத்தகம் 500 ஆண்டுகளாக திரளான மக்களால் வாசிக்கப்படுகிறது.

காலத்தின் தடைகளைக் கடந்து தேசங்களின் எல்லைகளைத் தாண்டி நிலைத்திருப்பது வேதபுத்தகம். இதை எழுதியவர்கள் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மரித்து விட்டாலும் புத்தகம் உலகமெங்கும் பரவலாக வாசிக்கப்படுகிறது.

அனைவரின் விருப்பையும் பெற்ற அதிசயம்

உலகில் இது ஒன்றே எல்லா வகையான மக்களாலும் எல்லாவிதமான மக்களாலும் வாசிக்கப்படுகிற புத்தகம். அனைத்து புத்தகங்களைக் காட்டிலும் வேறுபட்ட இந்த புத்தகம் ஞானிகளாலும், குழந்தைகளாலும், வயோதிபர்களாலும் வாசிக்கப்படுகிறது.

இலக்கியங்களில் இதற்கிணையானது எதுவுமில்லை. சிறுவர்களும் சிறுமிகளும் வீடுகளிலும் வேதபாட சாலைகளிலும் இதைப் படிக்கின்றனர். நியூட்டன், ஹெர்ஷெல், ஃபாரடே, பிரெவெஸ்டர் போன்ற பெரிய அறிஞர்களும், கிளாட்ஸ்டன், லிங்கன் போன்ற நாட்டுத் தலைவர்களும் இதனை சந்தோஷமாகப் படித்து தங்கள் வாழ்வின் வழிகாட்டியாக பயன்படுத்தியுள்ளனர்.

இதன் மொழிநடையின் அதிசயம்

கல்வியின் இருப்பிடமாகிய கிரேக்க தேசத்தின் ஏதன்ஸ் நகரிலோ, எகிப்திலுள்ள அலெக்ஸாண்டிரியாவிலோ இது எழுதப்படவில்லை. பூர்வகாலத்து ஞான இருப்பிடங்களின் மூலம் உந்துதல் பெற்ற மனிதராலும் எழுதப்படவில்லை. பாலஸ்தீனத்தில் வாழ்ந்தவர்களாலும், விவசாய தேசத்தில் வாழ்ந்தவர்களாலும், மேய்ப்பர்களாலும், மீன்பிடிப்பவர்களாலும் எழுதப்பட்டது. இவர்கள் இலக்கியத்தில் பேர் பெற்றவர்களல்ல. ஆயினும் இத்தகைய மக்கள் மூலம் அனைத்து தேசங்களுக்கும் ஏற்புடைய அந்தஸ்தான ஒரு புத்தகமாக இது காணப்படுகிறது.

இவ்வாறு படிப்பறிவற்றவர்களும், குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுமான மக்கள் யூதருக்கு மட்டுமல்ல உலகமனைத்துக்குமான இப்புத்தகத்தை எழுதியிருப்பது அதிசயம் தானே.

இது பாதுகாக்கப்பட்ட அதிசயம்

இன்னொரு அதிசயம் இது கொடூரமான தாக்குதல்களைப் பல காலங்களாகத் தாங்கி வந்துள்ளது. ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் மனிதர் இதை எரித்து, புதைத்து, அழிக்க முயற்சித்துள்ளனர். பற்பல யுத்தங்கள் நடத்தப்பட்டும் இது அழிக்கப்பட முடியவில்லை. அனேக அரசர்கள் இதை அழிக்க முற்பட்டுள்ளனர். சபையின் தலைவர்களும் பூமியின் முகத்திலிருந்தே இதை அழித்துவிட ஆலோசித்தனர்.

கி.பி.303-ல் டயோகிளிட்டன் என்ற ரோம பேரரசன் இப்புத்தகத்தின் அடிப்படையில் உலகம் அறிந்திராத மிகப்பெரிய கொலைவெறியை நடத்தினான். ஏறக்குறைய அனைத்து வேத புத்தகங்களும் அழிக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் அழிந்தனர். வெற்றித்தூண் ஒன்று நாட்டப்பட்டது. அதில் "கிறிஸ்தவர்களின் பெயர் அழிக்கப்பட்டு விட்டது" என பொறிக்கப்பட்டது.

ஆனால் சில ஆண்டுகளில் நோவா பேழையிலிருந்து வெளி வந்து ஜனங்கள் பூமியில் பெருகியதுபோல வேத புத்தகம் வெளிப்பட்டது. கி.பி.325-ல் கான்ஸ்டன்டைன் பேரரசராக சிங்காசனத்தில் அமர்ந்தபோது முதல் ஆலோசனை மன்றம் வேதபுத்தகத்தை நியாயஸ்தலத்தில் சத்தியத்திற்கு திட்டமான நியாயப்புத்தகமாக நியமிக்கப்பட்டது.

பின்பு மத்திய கால நீண்ட தாக்குதல்கள் நடைபெற்றன. ரோம சபை வேதவசனங்களை மக்களுக்குத் தடைசெய்தது. வேத புத்தகம் வைத்திருந்த மக்களை ரோம சபை நம்பவில்லை. எனவே பல யுகங்களாக அது அறியப்படாத புத்தகமாகயிருந்தது. மார்ட்டின் லூதர் என்ற பெரியவர், தான் தமது வாழ்வில் ஒரு வேதபுத்தகத்தையும் கண்டதில்லை எனக்கூறியுள்ளார்.

வேதபுத்தகத்திற்கான மிகப் பெரிய எதிர்ப்பு கடைசி 250 ஆண்டுகளில் ஏற்பட்டது. இதன் கொடிய எதிரிகள், சிந்தனைக்கு சுயாதீனம் வேண்டும் என்றனர். போலிங்புரோக், ஹியூம் மற்றும் வால்டயர் வேதபுத்தகத்தை எப்படியும் ஒழித்துவிடலாம் என்ற தீர்மானத்தோடிருந்தனர். பிரெஞ்ச்மான் என்பவர் நூறு ஆண்டுகளில் (தன் காலத்திற்குப்பின்) வேதபுத்தகம் ஒரு பழங்கால அபூர்வ பொருளாக மட்டுமே இருக்க முடியும் என்றார்.

பின்பு ஜெர்மன் தேசிய படை மிகக் கொடிய, அபாயகரமான தாக்குதல்களுடன் வந்தது.

ஆயினும் இன்று வேதபுத்தகம் உறுதியாய் நிற்கிறது. இன்னும் அது நிற்கும். எதிரிகள் தங்களால் செய்யக் கூடிய அனைத்தையும் செய்து விட்டனர். ஆயினும் நீண்டகால பாடுகளையும் தாக்குதல்களையும் கடந்து கர்த்தருடைய வசனம் இன்று சுயாதீனமாகவும் மகிமையுடனும் விளங்குகிறது.

முடிந்து போகாதது

இதன் ஆழமும், உயரமும் முடிவற்றது. கோடிக்கணக்கான வாசகர்கள் காலாகாலங்களாக இந்த ஆழமான சுரங்கத்திலிருந்து தோண்டி எடுத்தும் இதன் ஆழம் இன்னும் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை. தலைமுறை தலை முறையாக அதிக வல்லமையான அபிப் பிராயங்கள் திட்டங்கள் கருத்துக்கள் புத்தங்கள் இதிலிருந்து வெளிவந்துள்ளன. மிகப்பெரிய வல்லுநர்கள் இதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மாணவர்கள் ஆயிரக்கணக்கானோர் அனுதினமும் இதைப் படிக்கின்றனர். இதை வாசிப்பவர்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது.

இதிலுள்ள ஒரு அதிகாரம் அல்லது ஒரு வசனத்தின் மீது எழுதப்பட்ட நூல்கள் பல நூலகங்களை நிரப்பியுள்ளன. அவை இன்றும் புத்தம் புதியவைகளாகவும், செழுமையானவைகளாகவும் எழுதப்பட்டது போல் இன்றும் விரும்பப்படத்தக்கவைகளாகவுமிருக்கின்றன. அதிலுள்ள பொக்கிஷங்கள் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு வானத்தின் நட்சத்திரங்களைப் போல காணப்படுகின்றன.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் நிறைந்தது

பரலோகக் குரலை நம்மீது தருவது வேதபுத்தகம். ஐநூறு தடவைகள் முதல் 5 புத்தகங்களில் கர்த்தர் சொன்னார் அல்லது கர்த்தர் பேசினார் என்ற பதங்களைக் காணலாம். பின்வரும் புத்தகங்களில் முந்நூறு தடவை இவ்வாறு கூறப்படுவதோடு தீர்க்கத்தரிசன புத்தகங்களில் 1200 முறை இதே வசனிப்பு "கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" அல்லது "கர்த்தர் இப்படிச் சொல்லுகிறார்" என்று எழுதப்பட்டுள்ளது.

உலகமனைத்திலுமுள்ள மக்களின் மனசாட்சியோடு எந்த ஒரு புத்தகமும் இவ்வாறு பேசியதில்லை. வேறு எந்த புத்தகமும் இவ்வாறு வாசகர்களின் கீழ்ப்படிதலுக்குக் கட்டளை கொடுப்பதில்லை. இப்புத்தகம் மக்களின் உள்ளான மனச்சாட்சிக்கு அதிகாரத்தோடு பேசுகிறது. இது தேவனுடைய அதிகாரமே.

ஜீவிக்கிறதும் செயல்படுகிறதுமாயிருக்கிறது

தேவ ஆவியினால் எழுதப்பட்டது என்று மக்கள் நினைக்கலாம். ஆனால் அது இன்றும் மக்களை மாற்றுகிறதும், கிரியை செய்வதாகவுமிருக்கிறது. நீண்ட காலங்களுக்கு முன்பாகயிருந்தே இன்றுவரை மக்களின் இருதயத்தில் பிரவேசித்து தேவன் மனிதனுக்குள் ஊதிய அதே சுவாசம் இன்றும் ஜீவனையளித்து பெலனையும் கொடுக்கச் செய்கிறது. இந்த ஜீவ வசனம், ஜீவனுள்ள தேவனுடைய பெலத்தால் ஜீவ வல்லமையை அளிக்கிறது.

23-ம் சங்கீதம் ஆவியால் அருளப்பட்டது. இன்றும் மரண இல்லங்களிலே வாசிக்கப்படுகிறது. 119-ம் சங்.15-ம் வசனம் ஒரு மறைமுகமான கதறல். "உமது வேதத்தின் அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்". இந்த ஜீவ வசனம் மறுபடியும் ஆவியானவரால் நமக்குள் ஜீவனை ஊட்டுகிறது.

இது வேதபுத்தகத்தின் ஒப்பற்ற தன்மை, இது எனக்குரியது என நான் உணருகிறேன். இதன் வாக்குறுதிகள் எனக்குரியவை. 103-ம் சங்கீதத்தை நான் படிக்கும்போது அது பூர்வ எபிரேய மல்ல, அது இந்நாளுக்குரிய வல்லமையாகவும், ஜீவனுள்ள ஆத்துமாவாகிய நான் நன்றியால் நிறைந்து 'என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி' என்று பாடுகிறவனாகவுமிருக்கிறேன்.

சிருஷ்டித்து மாற்றுருவம் செய்கிறது

வேதபுத்தகம் மனிதருடைய வாழ்வை மாற்றக்கூடியது. அவர்களுடைய எதிர்காலத்தையும் மாற்றிவிடுகிறது. உலகமனைத்திலுமுள்ள இயக்கங்களை ஆரம்பிக்கிறது. இதன் ஒரு பாட பகுதியிலுதருடைய வாழ்வை மாற்றியது. அதன்மூலம் தற்கால யுகம் ஆரம்பமானது. அந்நீதியுள்ள சமுதாயத்தில் பிரவேசித்து அதை மறுமலர்ச்சியடையச் செய்கிறது. இதன் மறுமலர்ச்சியின் செயலுக்கு எத்தனையோ சாட்சிகளுண்டு.

கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது

எல்லாவற்றிற்கும் மேலாக வேதபுத்தகத்தின் உன்னத அதிசயம் என்பது 'கிறிஸ்து'. அவரே அதின் நிறைவும், மையமும், மிகப்பெரிய விஷயமுமானவர். பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் ஒன்றுபோல இயேசுவைக் குறித்து, அவர் சரித்திரத்தின் மகாபெரிய சத்தியம், மிகப் பெரிய விசை, எதிர்காலம் என்கின்றன. இதைக்குறித்து, "தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப் பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு" வெளி.21:23 என படிக்கிறோம்.

இப்புத்தகம் கிறிஸ்துவாகிய மேன்மையான நபர் - உலகின் வாஞ்சையின் மையம் - சரித்திரத்தை நடத்துகிறவர், தீர்க்கதரிசனங்களின் ஆதாரம் - வெளிப்படுத்துபவர், மீட்பர், உயிர்த்தெழுந்து ஆட்சி செய்பவர், திரும்பி வருபவர் - அனைத்து தேசங்களின் எதிர்பார்ப்பு என்பதையெல்லாம் விவரித்துக்கொண்டே இருக்கிறது. மனித இருதயத்தைக் காந்தம் போல இது இழுத்துக்கொள்ளும். இப்புத்தகத்தை மக்கள் சார்ந்திருப்பார்கள். அதற்காக வாழ்ந்து அதற்காக மரிப்பார்கள்.

இப்புத்தகத்தினண்டை வரும் போது பயபக்தியோடு வாருங்கள், வாசிக்கும்போது ஆவியானவரின் உதவிக் காக வேண்டுதல் செய்யுங்கள். "கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப் போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" யாத்.3:5.

பிற புத்தகங்களெல்லாம் பூமிக்குரியவை. ஆனால் இது பரத்திலிருந்து வந்தது. இப்புத்தகம் தேவ வார்த்தைகளை உள்ளடக்கியது மட்டுமல்ல, இது தேவனுடைய வார்த்தை!

இது ஒரு நல்ல புத்தகம் அல்லது சிறந்த புத்தகம் என்று மட்டும் எண்ண வேண்டாம். இதை இருதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இது மனித வார்த்தைகளல்ல, தேவ வார்த்தை. மட்டுமின்றி ஜீவனுள்ள தேவனுடைய ஜீவ வார்த்தை. அதன் ஆரம்பம் இயற்கைக்கு மேலானது. அதன் மதிப்பு விவரிக்க முடியாதது. அதன் எல்கை முடிவில்லாதது; தெய்வீக ஆக்கியோனால் மனித கையெழுத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வல்லமையுடன் அதிகார முடையது. தேவாவியால் எழுதப்பட்டு தனி நபரில் செயல்படக் கூடியது.

மஞ்சூரியாவின் இரத்தசாட்சியாகிய பார்வையற்ற சாங்

Blind Chang : Martyr of Manchuria - Part 1 *(பகுதி 1)*

Rosalind Goforth

சாங் ஷென் என்பவர் மஞ்சூரியாவில் டைப்பிங்கௌ என்ற கிராமத்தில் பிறந்தார். வெளி உலகத்திற்கே அறியப்படாமல் அவர் வாழ்ந்து மரித்திருக்க வேண்டும். ஆனால் 1886-ல் ஒரு குளிர் காலத்தில் இவர் வாழ்ந்த பகுதியிலிருந்து 120 மைல் தூரத்திலுள்ள முக்டென் என்ற இடத்திற்கு ஒரு அயல்நாட்டு மருத்துவர் வருவதாகவும் அவர் அனைத்து வியாதிகளையும் குணமாக்கக்கூடியவர் என்றும் வதந்தி பரவியது. கண்தெரியாதவர்கள் கூட அவரது ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையடைந்து திரும்பியதாக செய்திகள் வந்தது.

பார்வையிழந்த சாங் அப்போது 36 வயதுடையவராயிருந்தார். அவர் மேற்கூறிய செய்திகளை மிகுந்த உற்சாகத்துடன் கேட்டு தாமும் ஒருநாள் பார்வையை பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கைக்கு வந்தார். மேய் மாதம் ஒரு காலையில் ஒரு வழிகாட்டியின் துணையுமின்றி நீண்ட பிரயாணத்தை ஆரம்பித்தார். தனது பாதையை உணர்ந்துகொள்ள ஒரு பருமனான தடியை எடுத்துக் கொண்டார்.

பிரயாணத்தின் முதற்பகுதி நன்றாயிருந்தது. ஆனால் இன்னும் சுமார் ஒருநாள் பிரயாணம் இருந்தபோது திடீரென கள்வர்கள் அவரைத் தாக்கி அவரிடமிருந்த பணத்தை எடுத்துச் சென்றனர். அவரது அனல் கொடுக்கும் ஆடையையும் எடுத்துவிட்டு காயப்படுத்தி ரோட்டோரத்தில் உதவியற்ற வராக விட்டுச் சென்றனர். வழியோரத்திலிருந்த ஒரு திறந்த க்ஷேத்திரத்தின் குளிர்ந்த செங்கல் தரையில் அவர் இரவைக் கழிக்கவேண்டியதாயிற்று.

மருந்தகத்தின் வாசலண்டையில் வந்தபோது வியாதியால் களைப்படைந்து நிற்க பெலனற்றவராயிருந்தார். எனவே வாசலண்டை படுத்துவிட்டார். தன்னை மருந்தகத்தில் அனுமதிக்கும்படி சொல்லியனுப்பினார். உடனே ஒரு செய்தி வந்தது. மருந்தகம் நிறைந்திருந்த படியால் படுக்கையில்லையென்றும் அவருக்கு இடமில்லை என்ற செய்தி அது. செய்தியைக் கேட்ட பின்பும் கேட்காதவர் போல அவர் அங்கேயே படுத்திருந்தார். அவ்வேளையில் வெளியே செல்வதற்காக மருந்தகத்தின் சுவிசேஷகர் வாசல்பக்கமாக வந்தார். பசியும், பாடும் நிறைந்ததும் நடுங்கிக் கொண்டிருந்தது மான சாங்கைக் கண்ட அவரது உள்ளம் இரக்கப்பட்டது. அவர் விரைவாக மருந்தகத்தில் நுழைந்து கிறிஸ்டி என்ற மருத்துவரிடம் நேரடியாகச் சென்று தமது படுக்கையை அந்த மனிதருக்கு அளிக்கும்படி முன்வந்தார்.

ஆவிக்குரிய கண்கள் திறந்தன

ஒரு மாதம் தங்கிய சாங் சரீர சுகம் பெற்றார். அவருக்கு முழுப் பார்வை கிடைக்கவில்லை. அவர் தடவி தனது பாதையை கண்டுபிடிக்கும் நிலையிலிருந்தார். ஆனால் இந்தப் பார்வையும் முழுவதுமாகவும் நிரந்தர மாகவும் பறிபோய்விட்டது. வீட்டுக்குத் திரும்பிய அவர் ஒரு சுதேச மருத்துவரிடம் கண்சிகிச்சை பெற்றார்.

இந்த கசப்பு நிறைந்த தோல்வியின் அனுபவம் முன்பு மருந்தகத்தில் பெற்ற மீட்பின் அனுபவத்தால் சந்தோஷமாக மாறியது. டாக்டர் கிறிஸ்டி இவரைக் குறித்து "கண்பார்வையற்ற சாங்கைப் போல இந்த மருந்தகத்தில் எந்த நோயாளியும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டதில்லை, அவர் கிறிஸ்தவத்தின் முக்கிய சத்தியங்களை உட்கொண்ட வேகம் குறிப்பிடத் தக்கது" என்று குறிப்பிட்டுள்ளார்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்குடைய பழைய வாழ்க்கை மிக மோசமானது. அவர் சூதாட்டப் பிரியர். ஒரு அதிகாரி போல நடித்து, அவரைக் கண்டு பயப்படுகிறவர்களிடம் பணம் பிடுங்கியவர். தனது ஒரே பெண் குழந்தையை வீட்டைவிட்டுத் துரத்தி பிச்சையெடுக்கும் நிலைக்கு ஆக்கினார். சிறிது காலத்தில் மனைவியையும் வீட்டைவிட்டு துரத்தினார். அவளைத் துரத்திய பதினேழாம் நாளில் முழுப் பார்வையையும் இழந்தார். மிகவும் துன்மார்க்கமாய் வாழ்ந்த அவரை மக்கள், 'தன்னில் சிறிதளவு நன்மைகூட இல்லாத வன்' என்று பேசிக்கொண்டனர்.

இவருடைய மறுபிறப்பு தேவ கிருபையால் ஏற்பட்டது. விசுவாசத்தால் கிறிஸ்துவுக்குள் விடுதலை பெற்றார். "தேவனால் எல்லாம் கூடும்", "உம்மாலே கூடாத அதிசயமான காரியம் ஒன்று மில்லை" எரே.32:17.

மருத்துவமனையிலிருந்து வீடு செல்லுமுன் சாங், ஜேம்ஸ் வெப்ஸ்டெர் என்ற போதகரிடம் சென்று ஞானஸ்நானம் கேட்டார். தனது பாவங்கள் அனைத்திலிலுமிருந்து விடுபடவும் தன் முற்கால கருமையிலிருந்து கழுவப்படவும் ஆவலாயிருந்தார். ஆனால் அந்தப் போதகரோ சாங் இன்னும் அதிகமாக போதிக்கப்பட வேண்டுமென எதிர் பார்த்தார். சாங் வீடு திரும்பிச் செல்லவும் பின்பு அவரை சந்தித்து அவர் தொடர்ந்து ஆண்ட வரைப் பின்பற்றினால் ஞானஸ்நானம் கொடுப்பதாகக் கூறினார்.

சாங்கின் ஊழிய ஆரம்பம்

வீடு திரும்பிய சாங்கின் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பியிருந்தது. ரஸ்தா ஓரமாகப் பிரயாணிகள் இளைப்பாறு மிடங்கள் இருந்தன. இத்தகைய இடங் களில் அவர் ஒரு மேசையினருகில் உட் கார்ந்து என்றும் பழமையாய்ப் போகாத இயேசுவின் சரித்திரத்தைக் கூறுவார். இவ்வாறு வீடு சேருமுன்னாலேயே அவரது ஊழியம் ஆரம்பித்து விட்டது.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு தாம் கூறியது போல போதகர் வெப்ஸ்டர் சாங்கை சந்தித்தார். அவர் தமது சந் திப்பைக் குறித்து இவ்வாறு கூறியுள்ளார்:

"நான் கிராமத்தின் வாசலிலே வந்தபோது அங்கு இருவர் நின்று கொண்டிருந்தனர். அவர்களிலொருவர் லீ என்பவர். அவர் சாங்கை நன்கு அறிந்த வர். எனவே அவர் என்னை சாங்கின் வீட்டிற்கு அழைத்து சென்றார். நாங்கள் தேனீர் அருந்தியபோது சாங் கூறிய சம்ப வம் நான் என் பசியையும் களைப்பை யும் மறக்கச்செய்தது. முக்டேனிலிருந்து சாங் திரும்பி வந்தபோது உடனேயே மக்களிடம் ஆண்டவராகிய இயேசுவைக் குறித்துப் பேச ஆரம்பித்துவிட்டார். கிராமம் கிராமமாக ஏற்றுக்கொண்டவர் களின் வீடுகளில் சென்றார். மாலை வேளைகளில் வில்லோ மரங்களினடியில் கூடிய நூற்றுக்கணக்கானோருக்கு பிரசங்கித்தார். முதலில் அவர் பைத்தியம் பிடித்தவரென்று எண்ணி மக்கள் நகைத் தனர், அல்லது பரிதாபம் கொண்டனர். தொடர்ந்து அவர் பிரசங்கித்து, தமது வாழ்வின் மாற்றத்தை செயல்முறையில் காண்பித்தபோது சிலர் சபித்தனர். இன்னும் சிலர் ஆசீர்வதித்தனர். அப்பகுதி முழுவதும் கலக்கம் ஏற்பட்டது. வாரங் கள் கடந்து சென்றன. பரத்தின் உதவிக் காக ஜெபித்துக்கொண்டும், முக்டென் னில் படித்த பாடல்களைப் பாடிக் கொண்டும் தொடர்ந்து இயேசுவின் இரட்சிக்கும் அன்பினைக் கூறிக்கொண் டும் வந்தார்.

வெப்ஸ்டரின் வருகையால் மகிழ்ந்த சாங் அவரைத் தேடி வந்தார். ரஸ்தாவிலே இருவரும் சந்தித்தனர். சற்று தூரத்தில் வந்தபோது வெப்ஸ்டர் சாங்கை பெயர் சொல்லி அழைத்தார். சாங் ஒரு நிமிடம் தனது கோலின் மீது சாய்ந்து நின்று கொண்டு நின்றார். பின் முகமலர்ச்சியுடனும், கண்ணீருடனும் 'போதகர் அவர்களே! நீங்கள் வாக்குப் பண்ணியது போல நிச்சயம் வருவீர்கள்' எனக் கூறினார்.

அடுத்த இரு நாட்களும் வெப்ஸ் டருக்கு மறக்க முடியாத நாட்களா யிருந்தன. முதல் நாள் ஞானஸ்நானத் திற்குக் காத்திருந்தவர்களை சோதிக்கும் நாளாயிருந்தது. ஒவ்வொருவரும் தனித் தனியாக சோதிக்கப்பட்டனர். சாங்கு டன் இன்னும் 8 பேர் ஞானஸ்நானம் பெற்று ஞான அனுமானமும் பெற்றனர். இதைக் குறித்து வெப்ஸ்டர் "இந்த மனிதர்களை விடத் தகுதியானவர்களை நான் பார்த்ததில்லை. இதைவிட சிறந்த ஒரு சாக்கிரமெந்து ஆராதனையில் நான் சேர்ந்ததுமில்லை. பயபக்தியானதும் மகிழ்ச்சியானதுமான ஒரு ஆராதனை யாக அது இருந்தது. பார்வையற்ற சாங்கின் தலைமையில் அனைவரும் சாக்கிரமெந்துகளைப் பெற்றனர். கிறிஸ் துவை விசுவாசிப்பதாகவும் அதற்காகத் துணிவுடன் எல்லாவற்றையும் விட்டுவிடு வதாகவும் விக்கிரக ஆராதனைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் தேவ கிருபையால் தீமையிலிருந்து விலகி ஜீவனுள்ள தேவனை சேவிப்பதாகவும் அவர்கள் வாக்களித்தனர். இந்தக் காட்சி விவரிக்க முடியாத ஒன்றாயிருந்தது."

(தொடரும்)

செப்டம்பர் மாத உபவாச ஜெபம்

Heart cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக இதய கதறல் 2018

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : ***08.09.2018***
2-வது சனிக்கிழமை

சமயம் : *காலை 10.00 மணி முதல்*
மாலை 05.00 மணி வரை

இடம் : **எ.ஜி. சபை**
அரன்மனை புதூர் விலக்கு,
மதுரை மெயின்ரோடு, தேனி.

தொடர்பு : பாஸ்டர் **தாசையா**
மொபைல் : 93446 12875

முக்கிய அறிவிப்பு

வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவுசெய்து உடனே எங்களுக்கு தெரிவி யுங்கள். இது நீங்கள் எங்களுக்கு செய்யும் பெரிய உதவியாகும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

Every man according as he purposeth in his heart, so let him give; not grudgingly, or of necessity; for God loveth a cheerful giver.

மேலே நீங்கள் வாசித்த ஆசிரியர் கடிதத்தை எழுத எனக்கு அதிக தூண்டு தலாயிருந்தது (Inspiration - divine guidance) சமீபத்தில் ஒரு கிறிஸ்தவ பத்திரிகையில் வாசித்த துண்டு செய்தியாகும். அதனை கீழே அச்சிட்டு ஆசிரியர் கடிதத்தை முடிக்கிறேன், தேவன் மாத்திரம் மகிமைப் படுவாராக.

GOLDEN PEARLS
பொன்னான முத்துக்கள்

Love, not nails, held Jesus on the cross
ஆணிகளல்ல, அன்பே இயேசுவை சிலுவையில் தொங்க வைத்திருந்தது

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஆசிரியர் : 04652 403295
உதவி : 94897 40295
ஜெப உதவி : 94980 30295
அலுவலகம் : 95432 21008
காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

ஆசிரியர் கடிதம் தொடர்ச்சி.....

கர்த்தருடைய கிருபையினால் ஆகஸ்ட் மாதம் 17-ம் தியதி மாலை 5.30 மணிக்கு கன்னியாகுமரி சென்னை ரயிலில் நாகர்கோவிலிருந்து 4 பேர்களும், விருதுநகர், மதுரை ஸ்டேஷன்களில் இருவரும், ஆக 6 பேர் கள்ளகுறிச்சி உபவாச ஜெபத்திற்குச் சென்றோம்.

சில காரணங்களினால் ரயிலில் எங்களுக்கு படுக்கை வசதி கிடைக்க வில்லை. ஆயினும் டிக்கெட் பரிசோதகர் கண்களில் தேவன் தயவு கிடைக்கப் பண்ணினார். அவர் சிரித்துக்கொண்டே எங்கள் அனைவருக்கும் படுக்கை வசதி செய்து தந்தார்.

நள்ளிரவு சுமார் 3.00 மணிக்கு சபைபோதகர், முன்பின் முகம் அறியாத எங்களை அன்புடன் வரவேற்று, சுமார் 50 கிலோமீட்டர் தூரமுள்ள கள்ளக் குறிச்சிக்கு, சிலரை அவருடைய வாகனத்திலும், சிலரை சபை விசுவாச தம்பிகளோடு பஸ் மூலமாகவும் அழைத்து சென்றார்.

அதிகாலை 5.00 மணியளவில் சபை விசுவாசி ஒருவர் வீட்டில் நன்றாக இளைப்பாறி 8.00 மணியளவில் ஆயத்தமாகி ஆலயத்திற்கு வாகனத்தில் போனோம். அங்குள்ள சூழ்நிலை மிகவும் பாதகமாக இருந்தது. மின்சாரம் தடைப்பட்டிருந்தது. அந்த சூழ்நிலை யிலும் ஊழியம் செய்யும் தம்பியொருவர் 10.00 மணிக்கு பாடல்களைப் பாடி உபவாச ஜெபத்தை ஆரம்பித்தார்.

சரியாக 10.30 மணிக்கு ஆராதனையை ஆரம்பித்து, தொடர்ந்து 1. தரிசன செய்தி, 2. தேசத்திற்கான ஜெபம், 3 தேசத்தை குறித்த தரிசன சவால், 4. இறுதி செய்தி, 5. விசேஷ ஜெபம் என்று உபவாச ஜெபம் மிகவும்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசீர்வாதமாக 5.00 மணி வரை நடைபெற அன்பின் ஆண்டவர் இரக்கம் பாராட்டினார். ஜனங்கள் இந்த உபவாச ஜெபத்தோடு இணைந்து கலந்து கொண்டார்கள், தேவனுக்கே மகிமை.

அதன்பின் ஸ்தல போதகர் தனது மனைவி பிள்ளைகளுடன் எங்களை மிகவும் அன்புடன் உபசரித்தார்கள். ''சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்" (சங். 41:1) என்ற தேவனுடைய வார்த்தையின்படி, மிகுந்த நெருக்கடியின் மத்தியில் ஊழியம் செய்யும் ஊழியக்காரர் குடும்பத்தை கர்த்தர் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்" (சங். 91:14)

உபவாச ஜெபம் முடிந்த பிற்பாடு அடுத்தக்கட்ட போராட்டம் உச்ச கட்டமாய் ஆரம்பமாயிற்று. நாம் தாமதமாய் டிக்கெட் எடுத்த சூழ்நிலையினாலும் இன்னும் சில காரணங்களினாலும் விருத்தாச்சலத்தில் நாம் ரயில் ஏற அனுமதி கிடைக்கவில்லை. நமது நண்பர்கள் மூலமாய் சென்னையிலுள்ள ரயில் நிலையத்தில் பிரயாசப்பட்டும் முடியாமற்போயிற்று.

இந்நிலையில் ரயில் சென்னையிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. நாங்கள் விருத்தாச்சலத்தில் தவித்துக் கொண்டிருக்கிறோம். கர்த்தர் கிரியை செய்ய ஆரம்பித்தப்படியால் சென்னையில் ரயில் ஏறாத எங்கள் இருக்கைகளை டிக்கெட் பரிசோதகர் வேறுயாருக்கும் வழங்கவில்லை.

இந்நிலையில் தேவனுடைய பிள்ளையொருவர் டிக்கெட் பரிசோதகருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவிக்க, நாங்கள் விருத்தாச்சலத்தில் ரயிலில் ஏற ஆண்டவர் உதவிச்செய்தார். டிக்கெட் பரிசோதகர் கேட்ட முதல் கேள்வி, ''நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?" நாங்கள் உபவாச ஜெபம் நடத்த போயிருந்தோம் என்று கூறினோம். (அவர் புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டவர் என்று கேள்விபடுகிறோம், தேவன் அவரை ஆசீர்வதிப்பாராக) இதற்கிடையில் ஹெல்ப் லைன் மூலமாகவும் முயற்சித்தோம், அவர்கள் ஹெல்ப் பண்ணவில்லை ஆனால் ஆண்டவர் ஹெல்ப் பண்ணினார், அல்லேலூயா!

இந்த உபவாச ஜெபத்தைக் கர்த்தர் அபரிமிதமாய் ஆசீர்வதித்த படியால், உபவாச ஜெபத்தை நடத்தின எங்களுக்கும், இன்னும் அதிகமாய் ஜெபிக்க வேண்டும் என்ற ஆசையை தேவன் கிருபையாய் தந்திருக்கிறார்.

"அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுது கொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துக் கொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்" சங். 126:6. இதுதான் கள்ளக்குறிச்சி உபவாச ஜெப அறிக்கை. தேவன் மாத்திரம் மகிமைப் படுவாராக. ஞாயிறு காலை 45 நிமிடங்கள் தாமதமாக 6.15 மணிக்கு நாகர்கோவில் வந்து சேர்ந்தோம்.

தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு நாம் நடத்தும் உபவாச ஜெபங்களுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள். இன்று (20.08.2018) வரை அந்தமானுக்கு நாம் விமான டிக்கெட் எடுக்கவில்லை; எனவே இங்கிருந்து சென்னைக்கும் ரயில் டிக்கெட்டுகள் பதிவு செய்யப்படவில்லை. கர்த்தருடைய ஆவியானவர் உங்களை ஏவுகிறபடி உதவுங்கள்.

வெஸ்லி தேவதாசன்

சாமுவேல் ஃபின்னி

நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும் போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண்	:
பெயர்	:
முகவரி	:
பின்கோடு	:
தொலைபேசி	:
அலைபேசி	:

வாசகர் கடிதம்

கர்த்தருக்குள் அன்பான பாஸ்டர் அவர்களுக்கு அன்புடன் எழுதிக்கொள்ளுவது,

ஐயா, ஜூலை மாத வருகையின் தூதன் மாத இதழ் வந்து கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. நன்றி!

கடலூரில் டவுன் ஹாலில் 21.07.18 அன்று ஜூலை மாத உபவாச ஜெபம் நடைபெறுவதாக குறிப்பிட்டிருந்தது, மிக்க மகிழ்ச்சி. என்னால் உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். எனக்கு எண்பது வயதாகிறது. உடலில் எட்டு ஆப்ரேசன் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து ஒரு மணி நேரம் கூட உட்கார முடியாது. வருகையின் தூதன் மாத இதழின் வாசகர் எண் 01640 ஸ்தோத்திர காணிக்கையாக ரூ.500/-ஐ என் மகன் மூலம் அனுப்பியுள்ளேன். பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிகை செய்திகள்

தாய்மையும் கடமையும் கலந்து பெண்மை

ஆபத்தில் இருக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளை காப்பாற்றுவதற்காக பெங்களூரு மாநகரில் ஹொய்சானா பிங்க் என்ற வாகனங்கள் காவல்துறை சார்பில் ரோந்து பணியில் ஈடுபடுகின்றன. சமீபத்தில் ரோந்து பணியில் உதவி சப்-இன்ஸ்பெக்டர் நாகேஷ், பெண் போலீசார் அர்ச்சனா, கலாவதி ஆகியோர் ஈடுபட்டிருந்தபோது, எலெக்ட்ரானிக் சிட்டி போலீஸ் நிலையத்தில் இருந்து அவர்களை தொடர்புகொண்டனர். தொட்டதொகூரு செலிபிரிட்டி லே-அவுட் குப்பேமேட்டில் குழந்தை ஒன்று கிடக்கிறது. அங்கு விரைந்து செல்லுங்கள் என்று தகவல் கொடுத்தனர். அதைக் கேட்டதும், பெண் போலீஸ் அர்ச்சனாவிடம் கடமை உணர்வும், தாய்மை உணர்வும் ஒருசேர கிளர்ந்தது.

அடுத்த 10 நிமிடத்தில் அர்ச்சனா குழுவினர் அந்த இடத்தை அடைந்தனர். அங்கு மக்கள் கூட்டம். கூட்டத்தை விலக்கிச் சென்று பார்த்த போலீஸ் குழுவினருக்கு அதிர்ச்சி. பிறந்த சில மணி நேரத்தில், தொப்புள் கொடி கூட சரியாக அறுக்கப் படாமல், ரத்தமும் சதையும் தோய்ந்த பரிதாபமான நிலையில் பிளாஸ்டிக் பையில் சுற்றப்பட்டு, குப்பை மேட்டில் ஆண் குழந்தை அனாதையாக கிடந்தது. தொப்புள் கொடியோடு தன் உறவையும் அறுத்துக் கொண்ட தாய் அனாதையாக்கிவிட்டதால், அபயம் தேடி அது அழுது... அழுது... நாக்கு வறண்டு காணப்பட்டது. அதைப் பார்த்து இதயம் கனத்துப் போன பெண் போலீஸ் அர்ச்சனா அந்த குழந்தையை அள்ளி எடுத்து, உடனே அருகில் இருந்த மருத்துவ மனைக்கு கொண்டு சென்றார். டாக்டர்கள் அந்த குழந்தையின் தொப்புள் கொடியை சரியாக அறுத்து, சுத்தம் செய்து, முதல் உதவி சிகிச்சை அளித்து மீண்டும் போலீஸ் வசம் ஒப்படைத்தனர்.

குழந்தையை கையில் வாங்கினார் அர்ச்சனா, அது அழக்கூட சக்தியின்றி இருந்தது. தற்போதுதான் மகப்பேறு விடுமுறை முடிந்து பணியில் சேர்ந்த அர்ச்சனாவுக்கு, அந்த குழந்தை தாய்ப்பால் குடிக்காமல் பசியால் துவண்டு போயிருக்கிறது என்பது புரிந்தது. உடனே தாய்மை உணர்வு மேலோங்க, போலீஸ் நிலையத்தில் வைத்தே அந்த குழந்தையை அரவணைத்து தாய்ப்பால் புகட்டினார். அந்த தாயின் முகம் பார்த்து மகிழ்ந்து தாய்ப்பால் குடித்த குழந்தை சிறிது நேரத்தில் இயல்பு நிலைக்கு திரும்பியது.

அதன் பிறகு குழந்தை அழத் தொடங்கியது. அந்த அழுகை மூலம் அர்ச்சனாவுக்கு தனது நன்றியினை தெரிவித்திருக்கிறது. அர்ச்சனா கண்களிலும் நீர் கோர்த்து விட்டது. அங்கிருந்தவர்கள் அர்ச்சனாவை மனதார பாராட்டினார்கள்.

அர்ச்சனாவின் இந்த மனிதாபிமான செயல் பற்றி பெங்களூரு மாநகர போலீசார் தங்கள் டுவிட்டர் மற்றும் முகநூல் பக்கத்தில் பதிவிட்டனர். இதை அறிந்த மாநில போலீஸ் டி.ஜி.பி நீலமணி ராஜு, பெங்களூரு மாநகர போலீஸ் கமிஷனர் சுனில் குமார், எலெக்ட்ரானிக் சிட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் போலோத்தீன் உள்பட பல உயர் அதிகாரிகள் பாராட்டினார்கள். பொது மக்களிடம் இருந்தும் பாராட்டுகள் குவிந்தன. கர்நாடக மாநில மகளிர் ஆணையத்தின் தலைவி நாகலெட்சுமிபாய் நேரிலேயே போலீஸ் நிலையத்துக்கு வந்து அர்ச்சனாவை பாராட்டினார். கர்நாடக முதல் - மந்திரி குமாரசுவாமியும் அர்ச்சனாவுக்கு டுவிட்டர் மூலம் வாழ்த்து தெரிவித்தார்.

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

To

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008